# வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**ந.க.எண்.3077/ஆ5/2026 நாள். 07.2026**

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் மாவட்ட அளவில் – தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய சூலை 18ஆம் நாளினையே தமிழ்நாடு நாளாக இனி கொண்டாடப்படும் என அறிவிக்கப் பட்டமை – 2026–2027ஆம் ஆண்டிற்கு "தமிழ்நாடு நாள் விழா" கொண்டாடுதல் – வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி மாணாக்கர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் 15.07.2026 அன்று நடத்துதல் மாணாக்கர்களை போட்டியில் பங்கேற்க செய்தல் – தொடர்பாக

பார்வை

1. மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி செய்தி (ம) விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி, நாள். 08.07.2026
2. சென்னை, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் குறிப்பாணை எண்.ஆமொ4/278/2026, நாள் 09.07.2026
3. வேலூர் மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநரின் கடித ந.க.எண்.572/2026, நாள். 10.07.2026

-----

பார்வை 3–ல் காணும் கடிதத்திற்கிணங்க 2026–2027ம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி துறை சார்பில் பள்ளி மாணாக்கர்களிடையே பேச்சாற்றலையும், படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18ஆம் நாளினை "தமிழ்நாடு நாளாக" இனி கொண்டாடப்படும் என ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ( அரசு / அரசு உதவிபெறும் / தனியார் (அ) பதின்மப் பள்ளிகள்) 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் கீழ்க்குறிப்பிடப்பெற்றுள்ள தலைப்பில் போட்டிகள் நடக்கும் எனவும் போட்டி நடைபெறும் இடம் பற்றிய விவரமும் மாணவர்களுக்கு தெரிபடுத்தவேண்டும் என பள்ளி தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

**நாள்– 15.07.2026 (புதன்கிழமை)**

**நேரம் – காலை 9.30 மணி**

**இடம் – அரசு மேல்நிலைப் பள்ளி, தொரப்பாடி**

## தலைப்புகள்

| கட்டுரைப்போட்டி | பேச்சுப்போட்டி |
|---|---|
| 1. தமிழ்நாடு நாள் கருவானது முதல் உருவானது வரை | 1. நான் விரும்பும் தமிழ்நாடு<br>2.அன்றைய மெட்ராஸ் மாகாணம் இன்றைய நவீன தமிழ்நாடு<br>3.இளைஞர்களின் பார்வையில் தமிழ்நாடு<br>4.கல்வியில் சிறந்த தமிழ்நாடு<br>5.வீரம் செறிந்த தமிழ்நாடு |

போட்டிகளில் வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே முதல் பரிசாக ரூ.10000, இரண்டாம் பரிசாக ரூ.7000, மூன்றாம் பரிசாக ரூ.5000 மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களும் வழங்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்போட்டிகளில் முதல் பரிசு பெறும் மாணவர்களைக் கொண்டு மாநில அளவிலான போட்டி நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்பெறும் எனவும் பார்வை (2)இல் காணும் குறிப்பாணையில் தெரிவிக்கப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி அனைத்துப் பள்ளிகளிலும் ( அரசு / அரசு உதவிபெறும் / தனியார் (அ) பதின்மப் பள்ளிகள்) 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் இப்போட்டிகளில் கலந்துக்கொள்வதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூகுள் விரித்தாளில் (Google spreadsheet) 13.07.2026க்குள் பதிவு செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணாக்கர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை நிறைவு செய்து தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் போட்டி நடைபெறும் அன்று ஒப்படைக்கவேண்டும். மற்றும் இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மாணவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என அனைத்துப் அரசு / அரசு உதவிபெறும் / தனியார் (அ) பதின்மப் பள்ளி தலைமையாசிரியர்கள் / தாளாளர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. போட்டியின் விதிமுறைகள்
2. படிவம்
3. கூகுள் விரித்தாளில் (Google spreadsheet)

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

10/7/26

பெறுநர் –
தலைமையாசிரியர் / தாளாளர் / முதல்வர்கள்,
அனைத்து அரசு /நிதியுதவி / தனியார் மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்ட தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர்,
   தமிழ் வளர்ச்சி துறை, மாவட்ட ஆட்சியர் வளாகம்,
   வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது. )
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

## தமிழ் வளர்ச்சித் துறை – வேலூர் மாவட்டம்

## தமிழ்நாடு நாள் – பள்ளி மாணாக்கர்களுக்கான மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகள்

1. போட்டிகள் 15.07.2026 **புதன்கிழமையன்று தொரப்பாடி, அரசு மேல்நிலைப்பள்ளி வளாகக் கூட்ட அரங்கில்"** நடத்தப்பெறவுள்ளன. வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணாக்கர்கள் மட்டுமே மாவட்ட அளவிலான இப்போட்டிகளில் பங்கேற்க முடியும். போட்டிகளில் பங்கேற்க பரிந்துரைக்கப்படும் மாணாக்கர்கள் உரிய படிவத்தினை பூர்த்தி செய்து அந்தந்த தலைமையாசிரியரின் பரிந்துரையின் (கூகுள் விரித்தாளிலும் பதிவிட வேண்டும்) அடிப்படையில் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள். போட்டியன்று மாணாக்கர்கள் முற்பகல் 9.30 மணிக்கு போட்டிகள் நடைபெறும் இடத்திற்கு வருகைபுரிந்து தங்கள் வருகையை பதிவு செய்திடல் வேண்டும். உரிய நேரத்திற்கு வருகைதராத மாணாக்கர்கள் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்பெறமாட்டார்கள். நடுவர்களின் முடிவே இறுதியானது. போட்டிகள் நடத்தப்பெற்ற அன்றே முடிவுகள் அறிவிக்கப்பெறும்
2. போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து மாணாக்கர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படும். பயணப்படி ஏதும் வழங்கப்பெற மாட்டாது
3. தமிழ்நாடு நாள் – பள்ளி மாணாக்கர்களுக்கான மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் 2021 – 2025 ஆம் ஆண்டுகளில் முதல் பரிசுப் பெற்ற மாணவர்கள் பங்குபெற இயலாது.
4. **தலைப்புகள்**

| கட்டுரைப்போட்டி | பேச்சுப்போட்டி |
|---|---|
| 1. தமிழ்நாடு நாள் கருவானது முதல் உருவானது வரை | 1. நான் விரும்பும் தமிழ்நாடு<br>2. அன்றைய மெட்ராஸ் மாகாணம் இன்றைய நவீன தமிழ்நாடு<br>3. இளைஞர்களின் பார்வையில் தமிழ்நாடு<br>4. கல்வியில் சிறந்த தமிழ்நாடு<br>5. வீரம் செறிந்த தமிழ்நாடு |

5. கட்டுரைப்போட்டி முற்பகல் 10.00 மணி தொடங்கி நடத்தப்பெறும். கட்டுரைப்போட்டியில் பங்கேற்கும் மாணாக்கர்களுக்கு வெள்ளைத்தாள் வழங்கப்பெறும். எழுதுகோல் உள்ளிட்ட எழுதுபொருள்கள், தேர்வுஅட்டை ஆகியவற்றை மாணாக்கர்களே கொண்டுவர வேண்டும்.
6. பேச்சுப்போட்டி முற்பகல் 10.30 மணி தொடங்கி நடத்தப்பெறும்.
7. கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெறும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே முதல் பரிசாக ரூ.10000, இரண்டாவது பரிசாக ரூ.7000, மூன்றாவது பரிசாக ரூ.5000 மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பெறும்
8. மேலும் விவரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்

**தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்**
**தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகம்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர்**
**தொ.பே.எண் . 0416–2256166**
**மின்னஞ்சல் : tamilvalarchivlr17@gmail.com**

# தமிழ் வளர்ச்சித் துறை

## பள்ளி மாணாக்கர்களுக்கான போட்டிகள் – பங்கேற்புப் படிவம்

1 மாணவரின் பெயர் (தமிழில்) :

2 தந்தையின் பெயர் :

3 பிறந்த நாள் / வயது :

4 பயிலும் பள்ளி/ முகவரி :

(தொலைபேசி எண்ணுடன்)

5 பயிலும் வகுப்பு :

6 இல்ல முகவரி ( தொலைபேசி எண்ணுடன் ) :

7 மாணவரின் மாதிரி ஒப்பம் (தமிழில்) : 1.

2

### பரிந்துரை

இப்பள்ளியில் பயிலும் செல்வன்/செல்வி ………………………………………………………… தமிழ் வளர்ச்சித் துறையால் மாவட்ட அளவில் நடத்தப்பெறவுள்ள கட்டுரை/பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள பரிந்துரைக்பெறுகிறார்.

முத்திரை தலைமையாசிரியர் ஒப்பம்

நாள்:

போட்டி நடைபெறும் நாளன்று

மாணவரின் ஒப்பம் ……………………………………………..